## இலங்கை பௌத்த, பாலி பல்கலைக்கழகம் - 2014

இலங்கை பௌத்த, பாலி பல்கலைக்கழகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1981 இன் 74 ஆம் இலக்க இலங்கை பௌத்த, பாலி பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனத்தின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை பௌத்த, பாலி பல்கலைக்கழகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்**

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 01 இன் பிரகாரம் சகல சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்கள் அதன் நியாயப் பெறுமதியில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டுமெனினும், பாவனைக்கு எடுக்கப்படுகின்ற போதிலும் முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்ட ரூபா 4,681,438 கிரயமான சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு நியாயப் பெறுமதியினை கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்**

இனங்காணப்பட்ட சொத்துக்களுக்குரிய பெறுமானத்தேய்வினை சீராக்கம் செய்யும் போது, நிர்மாணித்தல் மற்றும் அகற்றலுக்குரிய கால எல்லையினை கருத்திற்கொண்டு கால அடிப்படையில் பெறுமானத்தேய்வு கணிப்பிடப்படும் கொள்கை என நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்ததெனினும், பல்கலைக்கழகத்தினால் நடைமுறையல்லாத பல்வேறு ஆதனத் தொகுதிகள் கொள்வனவு செய்த தினத்திலிருந்து பெறுமானத்தேய்விடும் கொள்கையும் மற்றைய ஆதனத் தொகுதிகளுக்கு கொள்வனவு செய்த திகதியினை கருத்திற்கொள்ளாது ஆண்டு முழுவதற்குமாக தேய்விடும் கொள்கை பின்பற்றப்பட்டிருந்தது.

**2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணிப்பீட்டு வழுக்களின் காரணமாக மீளாய்வாண்டிற்கான கட்டிட பெறுமானத்தேய்வு ரூபா 624,378 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்த பல்கலைக்கழகத்திற்கு உரித்துடைய வாகனங்கள் மீள் மதிப்பீட்டின் பின்னர் பயன்பாட்டு ஆயட்காலம் மதிப்பிடப்பட்டு பெறுமானத்தேய்வு கணிப்பிடப்பட வேண்டிய போதிலும், புதிய வாகனங்களுக்கான பெறுமானத்தேய்வு விகிதங்களின் அடிப்படையில் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட வாகனங்கள் பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த காரணத்தினால் வருடாந்த பெறுமானத்தேய்வினது சரியான தன்மை உறுதிப்படுத்தப்படவில்லை.

(இ) பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்ட மீள் மதிப்பீட்டினை கணக்கு வைக்கும் போது, அச் சொத்துக்களின் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு என்பவற்றை சரியாக இணங்கண்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் பிரகாரம் மீள் மதிப்பீட்டு மிகையானது ரூபா 11,863,188 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீள் மதிப்பீட்டிற்காக செலவிடப்பட்ட ரூபா 1,749,762 தொகையான மிகைச் செலவினமானது மூலதனச் செலவினமாக கட்டிடக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 1,232,684 கூட்டுத்தொகையான மீண்டெழும் செலவினம் 2015 ஆம் ஆண்டிற்குரிய செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) 05 வருடங்களை பூர்த்தி செய்யாத உத்தியோகத்தர்களுக்காக பணிக்கொடை ஒதுக்கங்கள் ஏற்படுத்தப்படாத காரணத்தால், மீளாய்வாண்டின் பணிக்கொடை செலவினம் மற்றும் பணிக்கொடை ஏற்பாடுகள் ரூபா 1,356,236 இனால் குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) தாபல் செலவினங்களை மேற்கொள்ளும் பொருட்டு நிறுவகத்தின் உத்தியோகத்தரொருவருக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 50,000 கட்டுநிதியில் வருட இறுதியில் ரூபா 35,035 தொகை பணம் எஞ்சியிருந்ததெனினும், அது பண மீதியொன்றாக முடிவுக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) நிதிக்கூற்றுக்களை இணக்கம் செய்யும் போது, வெளிவாரி பரீட்சைகள் பிரிவிற்குரிய ரூபா 4,930,839 தொகையான வேதனங்கள் மற்றும் ரூபா 1,571,407 பெறுமதியான காகிதாதிகள் உள்ளகக் கிரயப் பிரிவின் கிரயமொன்றாக கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன், வெளிவாரி பரீட்சைகள் பிரிவு பயன்படுத்தும் சொத்துக்களின் பெறுமானத்தேய்வு இனங்காணப்பட்டிருக்கவில்லை. நிதிக்கூற்றுக்களில் வெளிவாரி பரீட்சைகள் பிரிவிற்காக ரூபா 5,664,049 மிகையொன்றினை காட்டிய போதிலும் அதன் செம்மைத்தன்மை தொடர்பில் திருப்தி கொள்ள முடியாதிருந்தது.

(ஐ) கணக்காண்டினுள் பூர்த்தி செய்யப்படாத கட்டிட செயற்திட்டங்களுக்காக செலுத்தப்பட்ட இடைக்கால பட்டியல்களின் பெறுமதியானது கட்டிடக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தமையை சரிப்படுத்துவதற்காக நிறுத்தி வைத்தல்கள் மற்றும் முற்பணம் நீங்கலாக ஒப்பந்ததாரருக்கு செலுத்திய பணத்தினை மாத்திரம் பூர்த்தி செய்யப்படாத வேலைக் கணக்கிற்கு மாற்றியிருந்த காரணத்தால் அக் கணக்குகள் ரூபா 3,867,814 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) மிகை அறவீட்டு தன்மையிலான கட்டிட பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பிற்காக செலவிடப்பட்ட ரூபா 12,487,566 தொகையான செலவினம் மூலதனச் செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஓ) பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 674,653 கிரயமான இருப்பு மீளாய்வாண்டின் இறுதியில் எஞ்சியிருந்ததெனினும், அவ் இருப்பு இறுதி இருப்பாக கணக்கு வைக்கப்படாமல் இலாபத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஔ) மீளாய்வாண்டில் உருவாகியிருந்த எனினும் செலுத்தப்படாத செலவினங்கள் கணக்காண்டின் செலவினமொன்றாக அட்டுறுவாக கூடுமெனினும், உண்மையாக உருவாகியிருக்காத வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவின் ஒவ்வொரு பாடநெறிகளுக்குமான செலவின மதிப்பீடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட அறிக்கையொன்றினை அடிப்படையாகக் கொண்டு கணக்காண்டிற்காக ரூபா 2,025,064 கூட்டுப்பெறுமதியான செலவினங்கள் அட்டுறுவாக்கப்பட்டிருந்தது.

(க) 2014 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு வெளிப்படுத்தப்பட்ட இருப்பின் பௌதீக பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. வெளிப்படுத்தப்பட்ட

இருப்பிற்கு பொறுப்பான உதவிப் பதிவாளரின் அறிக்கையின் பிரகாரம், ரூபா 946,700 பெறுமதியான வெளிப்படுத்தப்பட்ட இருப்பானது நிதிக்கூற்றுக்களில் ரூபா 378,680 என காண்பிக்கப்பட்டமையால் இருப்பின் பெறுமதி ரூபா 568,020 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(கா) வெளிவாரி பாடநெறிகள் மூலம் கடந்த ஆண்டில் ஈட்டப்பட்ட ரூபா 1,249,213 மீதியானது மீளாய்வாண்டின் வருமானமொன்றாக இனங்காணப்படாமல், தொடர்ந்தும் ஈட்டப்பட்ட வருமானமொன்றாக பேணிவரப்பட்டிருந்தது.

**2.2.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பட்டு கணக்குகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், இடர் கடன் மீதி ரூபா 2,751,099 ஆன போதிலும் பரீட்சை மீதிப் பட்டியலின் பிரகாரம் அம் மீதியானது ரூபா 2,944,014 ஆனமையால் இடர் கடன் மீதியில் ரூபா 372,915 வேறுபாடு காணப்பட்டது.

**2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் அடிப்படையில் நிறுத்தி வைத்தல்கள் மீதியினுள் 05 வருடங்களை விஞ்சிய மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 8,756,861 தொகையான மீதி மற்றும் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 1,239,426 தொகையான மீதியும் எந்த செயற்திட்டத்திற்காக நிறுத்தி வைக்கப்பட்ட மீதிகளென உறுதி செய்யக்கூடிய சான்றுகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல்**

அரசினால் அங்கீகரிக்கப்பட்ட சம்பளம் மற்றும் படிகளுக்கு புறம்பாக 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கைக்கு இணங்காத வகையில் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் மூன்று வெளிவாரி செயற்திட்டப் பாடநெறிகளின் வருமானத்தில் போதியளவான மிகையொன்று இல்லாத போது ரூபா 988,600 தொகையான பணம் படிகளாக கல்விசாரா பதவியணியினருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி தாபன விதிக் கோவையின் 20 ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவு மற்றும் 10 ஆம் அத்தியாயத்தின் 1.6.1 ஆம் பிரிவு | மீளாய்வாண்டினுள் செலுத்தப்பட்ட ரூபா 51,514,987 கூட்டுத்தொகையான சம்பளங்கள் மற்றும் படிகளை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக கல்விசார் பதவியணியிணரின் வருகை மற்றும் வெளிச்செல்லல் குறிப்புப் பதிவேடு மற்றும் விடுமுறைப் பதிவேடு ஆகியன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நிலையான சொத்து பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளின் நிதி விளைவுகள் ரூபா 2,626,061 பற்றாக்குறையானதுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 2,300,007 ஆகும். முன்னைய ஆண்டுடிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 326,054 இனால் அதிகரித்தமைக்கு முதன்மை பட்டங்களின் பரீட்சைக் கட்டண வருமானம் குறைவடைந்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 3.2 பல்கலைக்கழகத்திற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்

பல்வேறு காரணங்களால் சேவையிலிருந்து நீக்குதல் மற்றும் பதவிகளை வழங்காமை காரணமாக ஊழியர்களினால் பல்கலைக்கழகத்திற்கு எதிராக நீதிமன்றங்களில் 08 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

இலங்கையில் மற்றும் வெளிநாட்டவரிடையே பௌத்த மதத்தினை பரப்புதல் மற்றும் தர்மத்தினடிப்படையிலான செயற்பாடுகளை போஷிப்பதற்காக பௌத்த தர்மம் மற்றும் ஒழுக்கம் தொடர்பான சாஸ்திரங்களை பயிற்றுவித்தல் பல்கலைக்கழகத்தின் பிரதான நோக்கமெனினும், கடந்த வருடங்களுக்கு ஒப்பாக உள்ளக பட்டங்களைப் பெற்றுக்கொள்வதற்கான வெளிநாட்டு மாணவர்களின் ஆர்வம் மிகவும் குறைவடைந்திருந்தது. 2013 ஆம் ஆண்டினுள் பட்டப்படிப்பிற்காக 46 வெளிநாட்டு மாணவர்கள் விண்ணப்பித்திருந்த போதிலும் மீளாய்வாண்டில் பட்டப்படிப்பிற்காக விண்ணப்பித்திருந்த மாணவர்களின் எண்ணிக்கை 9 வரை குறைவடைந்திருந்தது.

### 4.2 ஒரு மாணவருக்கான கிரயம்

மீளாய்வாண்டின் போது கல்வி நடவடிக்கைகளுக்காக 359 மாணவர்களுக்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த மீண்டெழும் செலவினம் ரூபா 235,642,269 ஆனதுடன், முன்னைய ஆண்டில் 333 மாணவர்களுக்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த மீண்டெழும் செலவினம் ரூபா 190,592,915 ஆக இருந்தது. மீளாய்வாண்டில் ரூபா 656,385 ஆகக் காணப்பட்ட ஒரு மாணவனுக்கான கிரயத்துடன் முன்னைய ஆண்டில் ரூபா 572,351 ஆன ஒரு மாணவனுக்கான கிரயத்துடன் ஒப்பிடுகையில் 14.68 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

### 4.3 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1997 நவம்பர் 21 ஆந் திகதிய 721 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம், சுய கணிப்பீட்டு அறிக்கையொன்றினை அடிப்படையாகக் கொண்டு தரம் II இலுள்ள விரிவுரையாளரொருவரை I ஆம் தரத்திற்கு பதவியுயர்த்த வேண்டிய திகதியினை தீர்மானிப்பதற்காக கட்டுப்பாட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வழிமுறைகள்

ஒழுங்கமைக்கப்பட்டிராத காரணத்தால் II ஆம் தரத்திலுள்ள விரிவுரையாளரொருவருக்கு I ஆம் தரத்திற்கு பதவியுயர்வு வழங்கும் போது 04 வருடங்கள் பின்னோக்கி பதவியுயர்வுகள் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) ஒழுக்காற்றுப் பரிசோதனைக்காக அமைச்சிற்கு மாற்றப்பட்ட விடுதி உப கட்டுப்பாட்டாளர்கள் இருவரின் கடமை மேவுகைக்காக ஒப்பந்த அடிப்படையில் இரு உப கட்டுப்பாட்டாளர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர். ஒழுக்காற்றுப் பரிசீலனை முடிவடைந்து நிரந்தர உப கட்டுப்பாட்டாளர்கள் இருவரும் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனரெனினும், ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்த ஒரு உப கட்டுப்பாட்டாளரின் ஒப்பந்த காலத்தினை நீடிப்பு செய்து தொடர்ந்தும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார். இந்த ஒப்பந்த நியமனத்தினை தொடர்ந்தும் பேணிச்செல்வதன் தேவைப்பாடு கணக்காய்வின் போது தெளிவுபடுத்தப்படாததுடன், 2015 யூலை 02 ஆம் திகதி வரையிலும் பயனற்ற முறையில் ரூபா 161,320 தொகை மேற்குறித்த உப கட்டுப்பாட்டாளர்களுக்கு சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தன.

(இ) கணனி விரிவுரையாளர் தரம் II இன் பதவியொன்றிற்கு உத்தியோகத்தரொருவரை இணைத்துக்கொள்வதற்காக குறைந்தபட்சம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டமொன்று இருத்தல் வேண்டும். எனினும் பல்கலைக்கழகத்தினால் அவ்வாறான குறைந்தபட்ச தகைமையினைப் பூர்த்தி செய்யாத நபரொருவர் 2012 ஒக்தோபர் 08 ஆம் திகதியிலிருந்து கணனி விரிவுரையாளர் தரம் II பதவிக்கு இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தார். இப் பதவிக்கான அடிப்படை தகைமையினை பூர்த்தி செய்த 17 விண்ணப்பதாரர்கள் விண்ணபித்திருந்ததுடன், அவ் விண்ணப்பதாரர்களிடையே தகவல் தொழில்நுட்ப பாடம் உள்ளடங்கலாக பல்கலைக்கழக பட்டத்தினை பூர்த்தி செய்திருந்த விண்ணப்பதாரர்கள் இருக்குமிடத்து பல்கலைக்கழக பட்டச் சான்றிதழொன்றினை சமர்பித்திருக்காத மேற்குறித்த விண்ணப்பதாரியை இணைத்துக்கொள்வதற்கு காரணமாக அமைந்த விடயங்கள் கணக்காய்வின் போது தெளிவுபடுத்தப்படவில்லை.

(ஈ) பல்கலைக்கழகத்தின் உதவிப் பதிவாளராக 2004 யூலை 12 ஆம் திகதி நியமனம் பெற்ற உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் காலத்தினுள் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்பட்டு ஒழுக்காற்று பரிசீலனை மேற்கொள்ளாது 2009 சனவரி 27 ஆம் திகதி நீக்கப்பட்டிருந்தார். தகுதிகாண் காலத்தினை நீடிப்பு செய்வதற்கோ அல்லது தகுதிகாண் நியமனத்தினை முடிவுறுத்துவதற்கு எதிராக உத்தியோகத்தரால் இரு சந்தர்ப்பங்களில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன், மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் உத்தியோகத்தரின் சேவைக்கமர்த்தி உரிய ஏனைய சலுகைகளை வழங்குமாறு கட்டளை பிறப்பித்திருந்தது. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தீர்மானங்களை அமுல்படுத்த வேண்டுமென 2005 ஒக்தோபர் 05 ஆந் திகதிய 17/2005 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் மூலம் மற்றும் மனித உரிமைகள் தீர்மானங்களை அமுல்படுத்தவில்லையெனின் உரிய அமைச்சரின் ஊடாக அமைச்சரவைக்கு தெரிவிக்க வேண்டியமை சனாதிபதி செயலாளரின் 2014 ஒக்தோபர் 10 ஆம் திகதிய ஈ&ஓ/ஏசீ/1/8/6 ஆம் இலக்க கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததெனினும், அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கலாசார மற்றும் மொழிகள் கற்கைப் பிரிவின் கலாசார பாடத்திற்காக பயிலுநர் விரிவுரையாளரொருவரை ஆட்சேர்ப்பு செய்வதற்காக புதினப்பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன், தகுதியுடைய ஒருவரை தெரிவு செய்வதற்காக ஒழுங்கமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையொன்றினை நடாத்துவதற்கு சபையொன்று நியமிக்கப்பட்டிருந்தது. நேர்முகப்பரீட்சையின் புள்ளிகளின் பிரகாரம் அதிகமான புள்ளிகளைப் பெற்றவர் குறித்த பதவிக்கு இணைத்துக்கொள்ளப்படாமல் ஐந்தாம் நிலைக்குரிய புள்ளிகளைப் பெற்றவருக்கு விரிவுரையாளர் பதவி வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறு முறையற்ற மற்றும் சட்டத்திற்கு முரணாக

வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஏதுவான காரணங்கள் கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்படவில்லை. இதன் காரணமாக பாதிப்புக்குள்ளாகிய விண்ணப்பதாரரொருவரால் பல்கலைக்கழகத்திற்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்தது.

(எ) முற்பணம் வழங்கப்பட்டு 02 முதல் 05 வருடங்கள் வரையான காலத்தினை விஞ்சியிருந்த ரூபா 915,262 இற்குரிய செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிராததுடன், பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து இந்த முற்பணத் தொகை மற்றும் செயலாற்றல் பிணைப்பொறுப்புக்களை அறவிடுவதற்கு அல்லது சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு நிறுவகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4.4 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு புலமைப்பரிசில் மற்றும் வெகுமதி நிதிய முதலீட்டு சேமிப்புக் கணக்கின் மீதி ரூபா 2,154,522 ஆனதுடன், அத் தொகை முதலீடு செய்யப்படாமல் சேமிப்பு வைப்பொன்றாக பேணப்பட்டு வரப்பட்டிருந்தது.

(ஆ) பௌத்த கல்வி மற்றும் பாலி மொழிக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்ட ஆய்வுகளுக்கு உதவியளிப்பதற்காக தாபிக்கப்பட்டிருந்த ஜியூன் பௌத்த ஆய்வு மற்றும் வெளியீட்டு நிதியம் 2006 இன் பின்னர் உரிய நோக்கத்தை எய்துவதற்காகப் பயன்படுத்தப்பட்டிராததுடன் மீளாய்வாண்டின் இறுதியிலும் நிதியத்தின் மீதி ரூபா 2,134,222 ஆகக் காணப்பட்டது.

(இ) 2013 ஆம் ஆண்டின் போது நூலகப் புத்தகங்களின் மெய்மையாய்விற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்ததுடன் அந்தக் குழுவின் அறிக்கையின் பிரகாரம் 4224 புத்தகங்களின் பற்றாக்குறை அவதானிக்கப்பட்டது. பற்றாக்குறைக்கு காரணமாக அமைந்த விடயங்களை புலனாய்வு செய்து பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரை இனங்கண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டதன் பின்னர் பற்றாக்குறையின் பெறுமதி கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட வேண்டுமெனினும் அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.5 நிதியத்தின் குறைவான பயன்பாடு

நிதியத்தின் தேவைப்பட்டினை உரிய முறையில் எதிர்வு கூறாமல் திறைசேரியிடமிருந்து நிதி ஏற்பாடுகளைப் பெற்றுக்கொண்ட காரணத்தால் 2014 ஆம் ஆண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு மூலதன செலவினங்களுக்காக பேணப்பட்டுவரும் காசுக் கணக்கில் ரூபா 20 மில்லியனை விட அதிகமான மீதியொன்று நிலவியது.

## 4.6 செயற்பாடற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2004 ஆம் ஆண்டு முதல் ரூபா 512 மில்லியன் செலவில் சகல வசதிகளுடனான நவீனமயமாக்கப்பட்ட கட்டிடம் உள்ளடங்கலாக உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த உட்கட்டமைப்பு வசதிகளை பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடிய வகையில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தேவைப்பட்டின் அடிப்படையில் மூலதனப் பொருட்களை கொள்வனவு செய்யாமையின் காரணமாக ரூபா 30,240 பெறுமதியான தொலைநகல் இயந்திரமொன்று, ரூபா 19,000 பெறுமதியான எழுதுவினைஞர் மேசையொன்று மற்றும் ரூபா 27,866 பெறுமதியான 02 நீர் வடிகலன் தாங்கிகள் ஆகியன 08 மாதங்கள் முதல் 31 மாதங்கள் வரையான காலமாக

களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. தேவைப்படொன்று இல்லாமல் இப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு காரணமாக அமைந்த விடயங்கள் கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்படவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கொள்வனவுத் திட்டம்

மீளாய்வாண்டிற்கான கொள்வனவுத் திட்டத்தில் கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த 35 பொருள் விடயங்களில் 11 பொருள் விடயங்கள் கொள்வனவு செய்யப்பட்டிராததுடன் ரூபா 8,978,551 கிரயமான 27 பொருள் வகைகள் கொள்வனவுத் திட்டத்திற்கு புறம்பாக கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், கொள்வனவுத் திட்டம் ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் இலங்கை பௌத்த, பாலி பல்கலைக்கழகத்தின் மஹோபாத்தியாய அவர்களின் கவனத்திற்கு அவ்வப்போது கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஆ) நிர்மாணங்கள்
(ஆ) மனித வள முகாமைத்துவம்
(இ) வெளியக செயற்திட்டங்களுக்கான கணக்கீடு
(ஈ) வாகனக் கட்டுப்பாடு